අභ්‍යන්තර හා ස්වදේශ කටයුතු සහ පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு
**Ministry of Internal and Home Affairs and Provincial Councils and Local Government**

ස්වදේශ කටයුතු අංශය (ලේකම් කාර්යාලය) | உள்நாட்டலுவல்கள் பிரிவு (செயலாளர் ஆலுவலகம்) | Home Affairs division (Secretary's Office)

මගේ අංකය / எனது இல / My No: அபிவிருத்தி – 2019
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2019.02.13

உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு சுற்றறிக்கை - 4/2019

அனைத்து மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள் மற்றும்
பிரதேச செயலாளர்களுக்கு,

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குழு மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பாளர் குழுக் கூட்டங்களை நடாத்தல்**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குழு என்பது, மாவட்ட மட்டத்திலும், பிரதேச ஒருங்கிணைப்பாளர் குழு என்பது, பிரதேச மட்டத்திலும் தமது அதிகார எல்லைக்குட்பட்ட அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் மற்றும் மேற்பார்வை செய்யும் பிரதான குழுக்களாகும். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குழுவின் தலைவராக அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சர் ஒருவரையும், அக் குழுவின் உப தலைவராக அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையும், பிரதேச ஒருங்கிணைப்பாளர் குழுவின் தலைவராக அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் நியமிக்கவும், மற்றும் அக் குழுவின் உப தலைவராக அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாகாண சபை உறுப்பினர் ஒருவரை நியமிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்கமைய, குழுவின் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்து, முறையாகவும் உரிய அனைவரதும் பங்குபற்றலுடனும் மேற்கொள்வதன் பொருட்டு பின்வரும் செயன்முறைகளைப் பின்பற்றுமாறு இத்தால் அறியத் தருகின்றேன்

1. பிரதேச செயலாளரின் அதிகார எல்லையில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களிலும், மாவட்ட செயலாளரின் அதிகார எல்லையில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களிலும் கலந்துரையாடி, பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. பிரதேச செயலாளர் பிரிவுக்குரிய சிக்கல்களை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களில் கலந்துரையாட வேண்டும் என்பதுடன், அதன் போது தீர்மானமொன்றை எடுக்க முடியாத விடயங்களை மாத்திரம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஊடாக தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காகச் சமர்ப்பித்தல் வேண்டும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கலந்துரையாடாத ஏதேனுமொரு விடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கலந்துரையாடலுக்காக சமர்ப்பிக்கப்பட்டால், அவற்றை மீளவும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.


අභ්‍යන්තර කටයුතු අංශය
உள்ளக அலுவல்கள் பிரிவு
Internal Affairs Division
15 වන මහල, "සුහුරුපාය", බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
15ம் மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்ல, இலங்கை.
15th Floor, "Suhurupaya", Battaramulla, Sri Lanka.
TP : +94 112 872 001/+94 112 876 586/+94 112 872 023
Fax : +94 112 872 024
email: info@internalaffairs.gov.lk
web :www.internalaffairs.gov.lk

ස්වදේශ කටයුතු අංශය
உள்நாட்டலுவல்கள் பிரிவு
Home Affairs Division
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
TP : +94 112 676 250
Fax : +94 112 676 252
email: info@moha.gov.lk
web : www.moha.gov.lk

පළාත් සභා හා පළාත් පාලන අංශය
மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் பிரிவு
Provincial Councils & Local Government Division
330, යූනියන් පෙදෙස, කොළඹ 02, ශ්‍රී ලංකාව.
330, யூனியன் பிளேஸ்,கொழும்பு 02, இலங்கை.
330, Union Place, Colombo 02, Sri Lanka.
TP : +94 112 305 326/7 or +94 112 303 280
Fax : +94 112 347 529
email: secretary@pclg.gov.lk
web : www.pclg.gov.lk

3. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் எடுக்கப்பட வேண்டிய தீர்மானத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு எடுத்தலாகாது. இருப்பினும், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் தீர்க்க முடியாது என அறிக்கையிடப்பட்ட சிக்கல்கள் இருப்பின், அவற்றை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடி, தீர்த்துக் கொள்ளல் வேண்டும். அதே போன்று பல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பொதுவான ஒரு பிரச்சினை இருப்பின் அல்லது அவசர அல்லது விசேட சந்தர்ப்பங்களில் ஏதேனுமொரு விசேடமான விடயம் தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதி இல்லாதவிடத்தும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

4. மாவட்ட செயலாளர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கையில், மேற்குறித்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தி, அதனை தயாரித்தல் வேண்டும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவினால் அனுமதி வழங்கப்படாத விடயங்களை (இலக்கம் 3 இல் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களைத் தவிர) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கலாகாது.

5. அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் எடுக்கப்படும் குறித்த சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் உரிய வரிசை அமைச்சு, தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு மற்றும் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சிடம் அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

6. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவிற்குரிய பணிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மேற்கொள்ளலாகாது என்பதுடன், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்குரிய பணிகளை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு மேற்கொள்ளலாகாது. பொறுப்புக்கள் தொடர்பில் தெளிவின்மை காணப்படின், பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளர் உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு செயலாளரின் ஆலோசனையை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

7. பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கான வருடத்திற்குரிய நாட்கள் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் தேசிய மட்ட அல்லது மாவட்ட மட்ட காரணமின்றி வேறு காரணங்களுக்காக குறித்த தினங்களை மாற்றம் செய்தலாகாது என்பதுடன், ஒரு சில பிரதிநிதிகளுக்குப் பங்குபற்றுவது சிரமமாக இருப்பின், குறித்த குழுவிற்கு கூடுவதற்கும் செயற்படுவதற்கும் அதிகாரம் உண்டு. ஏதேனும் காரணத்தினால் தலைவர் அல்லது உப தலைவருக்கு பங்குபற்ற முடியாமற் போயின், அதன் தலைமைத்துவத்தை வகிப்பதற்கு பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் தற்காலிகமாக தலைவர் ஒருவரை நியமித்து, அன்றைய நாளுக்கான கடமைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதற்கமைய, இடம்பெறும் கூட்டமொன்றின் அனைத்துப் பணிகளும் தலைவரினால் தலைமைத்துவம் வகிக்கப்பட்ட கூட்டமொன்றில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் போன்றே செல்லுபடியாதல் வேண்டும்.

8. பிரதேச ஒருங்கிணைப்புக் குழு அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்தும் தினங்களை தீர்மானிக்கையில் பாராளுமன்றம், மாகாண சபை கூட்டங்கள் நடைபெறும் தினங்களில் அல்லது அலுவலக பொது மக்கள் தினமான புதன்கிழமைகளில் குறித்த கூட்டங்களை நடாத்துதலாகாது.

9. பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடாத்தி, 05 வேலை நாட்களினுள் குறித்த கூட்ட அறிக்கையின் பிரதிகளை அனைத்து நிறுவனங்களுக்கும் வழங்குதல் வேண்டும். அத்துடன், அதன் பிரதியை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

10. பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடுவதற்காக அனுப்பி வைக்கப்படும் யோசனைகளை கூட்டம் நடைபெறுவதற்கு 03 வாரங்களுக்கு முன்னர் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அவற்றை உரிய நிறுவனங்களிடம் முன் வைத்து, பதில்களைப் பெற்றுக் கொண்டு, குறித்த பதில்களை முன்கூட்டியே யோசனைகளுக்குரியவர்களிடம் முன் வைத்தல் வேண்டும். குறித்த பதில் மூலம் திருப்தி அடையாவிடின், மீளக் கலந்துரையாடுவதற்காக நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

11. அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகள் அல்லது அரச உத்தியோகத்தர்களுக்கிடையே தீர்மானம் எடுப்பதில் சிக்கல் ஏற்பட்டால் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவினால் நியமிக்கப்படும் உப குழுவிடம் சமர்ப்பித்து, அறிக்கையொன்றைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதனை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடல் வேண்டும்.

12. அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அல்லது கட்டளைகளுக்கு அமைய இச் சுற்றறிக்கையின் விடயங்களில் திருத்தங்களை உள்ளடக்கல் குறித்து உங்களுக்கு உரிய முறையில் அறிவிக்கப்படும்.

13. அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் இது தொடர்பில் ஏதேனும் அறிவுறுத்தல்கள் அல்லது சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டால், அதன் பிரதிகளை ஒருங்கிணைப்புக் குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பெற்றுக் கொடுப்பது பிரதேச செயலாளரினதும் மாவட்ட செயலாளரினதும் கடமையாகும்.

14. பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரேனும் ஒரு அரச உத்தியோகத்தர் தொடர்பில் ஏதேனும் குற்றச்சாட்டு இருப்பின், அதனை பகிரங்கமாக சபையில் கலந்துரையாடலாகாது என்பதுடன், உரியவாறு பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரைக் கொண்டமைந்த குழுவொன்றிடம் முன்வைத்து, கூட்டத்திற்கு முன்னர் ஆராய்ந்து, உரிய அறிக்கையை கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் தலைவர் மற்றும் தேவையான பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி, தீர்மானமொன்றை எடுத்தல் வேண்டும். அது குறித்து உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு செயலாளருக்கும் அறிக்கையிடல் வேண்டும் என்பதுடன், பிரதிகளை தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு செயலாளருக்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

15. தேசிய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களின் போது மாவட்டத்தின் நடவடிக்கைகளை அரசாங்கத்தின் அங்கீகாரமின்றி செயற்படுத்தலாகாது. அத்தகைய அனைத்து விடயங்களையும் சனாதிபதி செயலாளர், பிரதமரின் செயலாளர், தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சு செயலாளர் ஆகியோருக்கு முழுமையான அறிக்கையுடன் சமர்ப்பித்து, அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் மாவட்ட செயலாளரின் கடமையாகும்.

16. பொது மக்களைப் பாதிக்கும் அவசர அத்தியாவசியமான விடயங்களை மாத்திரமே பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் நிகழ்ச்சி நிரல் மூலம் கலந்துரையாட முடியும். அத்தகையதொரு விடயத்தை கலந்துரையாடுவதற்கு முன்னர் தலைவர் மற்றும் பிரதேச செயலாளர்/மாவட்ட செயலாளர் அதற்கு அனுமதியளித்தல் வேண்டும்.

17. ஒவ்வொரு கூட்டத்தின் போதும் நடவடிக்கைகள் நிறைவடையும் வரை பிரதான உத்தியோகத்தர்கள் அனைவரும் கட்டாயமாக கூட்டத்தில் இருத்தல் வேண்டும்.

18. பிரதேச அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் அனைத்தும் உரிய நேரத்துக்கு ஆரம்பிக்கப்படல் வேண்டும். உரிய நேரத்தில் சபையை நடாத்தும் பொறுப்பு பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளருக்கு உரித்தானதாகும். அதே போன்று குறித்த கூட்டமானது உச்ச பட்சம் 2 ½ - 3 மணித்தியாலத்துக்கு மட்டுப்படுத்தப்பட்டவாறு (பிரதேசத்தின் அவசரத் தேவையைத் தவிர) நிறுவனத் தலைவர்களுக்குத் தமது அவசரப் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் நடாத்தல் வேண்டும்.

19. அந்தந்தப் பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் மாவட்டத்தின் தேவைப்பாடுகளைக் கவனத்திற் கொண்டு, ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் உப குழுத் தலைவர்களை நியமித்தல் வேண்டும். பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள தலைவர்கள் அதிகாரத்துடனே ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றல் வேண்டும்.

20. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அவ் அதிகார எல்லைக்கு வெளியிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அவ் அதிகார எல்லைக்கு வெளியிலும் அரச உத்தியோத்தர்களை அழைத்துள்ள ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவர்களது வேலைகள் முடிவடைந்ததன் பின்னர் வெளியேறிச் செல்ல வேண்டியிருப்பின் அந் நிறுவனத்திற்குரிய ஏதேனும் சிக்கல்கள் இருக்கின்றனவா என்பதை சபையிடம் விசாரித்து, வேறு சிக்கல்கள் இல்லையெனில் வெளியேறிச் செல்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

21. ஒவ்வொரு கூட்டத்திற்கும் அரசியல் அதிகார சபை பிரதிநிதிகள், அரச உத்தியோகத்தர்கள் அச் சபைக்குப் பொருத்தமானவாறு தேசிய உடை அல்லது உத்தியோகப்பூர்வ சீருடையுடன் பங்குபற்றல் வேண்டும்.

22. உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு செயலாளரின் பரிந்துரையின் பேரில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அல்லது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அமைச்சின் பிரதிநிதியொருவரை நியமிக்கலாம்.

23. ஏதேனும் ஒரு பிரச்சினைக்குரிய தீர்மானத்தை எடுப்பதற்கு உதவி புரிவதற்காக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கு அல்லது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவுக்கு பல்வேறு நபர்களை அழைத்தலாகாது. அத்தகைய சந்தர்ப்பத்தில் தேவையெனில் குறிப்பிட்ட சில தினங்களுக்கு முன்னர் அவர்களை அழைத்து, குறித்த கருத்து தொடர்பில் எழுத்து மூலம் மாவட்ட செயலாளருக்கு அல்லது பிரதேச செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

24. குழுவிற்கு ஏற்புடையது அல்லாதவிடத்தும், விசேட சந்தர்ப்பங்களில் குறித்த எந்தவொரு நபரையும் அழைப்பதற்கு தலைவருக்கு மற்றும் மாவட்ட செயலாளருக்கு அல்லது பிரதேச செயலாளருக்கு அதிகாரம் இருப்பினும், அவ் அழைப்பினை கூட்டத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தல் வேண்டும் என்பதுடன், சபைக்குப் பொருத்தமற்ற, உரியவரல்லாத பிரதிநிதிகள் பங்குபற்றுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

25. ஊடகவியலாளர்களுக்கு சபையின் விடயங்களை அறிக்கையிட வேண்டுமாயின், அதன் பொருட்டு மாவட்ட/பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட இறுதியில் உரிய குழுவின் தலைவர் மற்றும் பொது மக்கள் பிரதிநிதிகளுக்கு ஊடகக் கலந்துரையாடலொன்றை புறம்பாக நடாத்த முடியும்.

26. அனைத்து அறிக்கைகளையும் எழுத்து மூலமாக மற்றும் ஒலிப்பதிவு செய்து வைத்துக் கொள்ளும் பொறுப்பு பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளருக்குரித்தானதாகும். உரிய நிறுவனங்களின் ஊடகப் பிரிவு அல்லது பொறுப்பு வகிக்கும் பிரிவு அவற்றை சுவடிகள் காப்பகத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

27. மாகாணத்தின் அரசியல் பிரதிநிதிகளினால் தீர்க்கப்படாத சிக்கல்கள் இருப்பின் மாவட்டத்தில் உள்ள அமைச்சரின் தலைமைத்துவத்தினாலான குழுவொன்றிடம் முன்வைத்து, தீர்த்தல் வேண்டும்.

28. பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கலந்துரையாடும் பிரதான கூட்டமாவதால், அனைத்து அமைச்சுகளிலும்/திணைக்களங்களிலும் தீர்மானம் எடுக்கக் கூடிய மட்டத்திலான உத்தியோகத்தர் ஒருவரை இதில் பங்குபற்றச் செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். அத்துடன், கூட்டத்திற்காக முன் கூட்டியே தயாராக செல்வது தொடர்பிலும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும்.

29. பிரதேச செயலாளர் அல்லது மாவட்ட செயலாளர் பங்குபற்றாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசேடமாக அறிவிக்காவிட்டாலும் அறிக்கையின் பிரகாரம் தனது உத்தியோகத்தர்/உத்தியோகத்தர்கள் பங்குபற்றாமை தெரிய வரின், குறித்த அமைச்சு/திணைக்களம் அந் நிலைமையை சரிப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

30. தேசிய பட்டியல் கௌரவ அமைச்சர் ஒருவர் ஏதேனும் ஒரு பிரதேச செயலாளர் பிரிவுக்கு அபிவிருத்தி நிதி ஒதுக்கி இருப்பின், அப் பிரிவின்/அம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு அவர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர் பங்குபற்றலாம். அவரது பிரதிநிதி பங்குபற்றுவதாயின், அதன் போது அவர்கள் நிதி ஒதுக்கிய விடயம் தொடர்பில் தவிர வேறு எந்தவொரு விடயம் தொடர்பிலும் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாது.

எச்.ரீ.கமல் பத்மசிறி
செயலாளர்
உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு

பிரதிகள்

01. அனைத்து கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள்
02. அனைத்து மாகாண சபை கௌரவ உறுப்பினர்கள்
03. அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள்
04. சனாதிபதி செயலாளர், சனாதிபதி செயலகம்
05. பிரதமரின் செயலாளர், பிரதமர் செயலகம்
06. அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் - அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்துவதற்காக
07. அனைத்து பிரதம செயலாளர்கள் - அனைத்து மாகாண சபை திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவுறுத்துவதற்காக
08. அனைத்து மாகாண அமைச்சு செயலாளர்கள்
09. பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம், திறைச்சேரி
10. பணிப்பாளர் நாயகம், தேசிய வரவு செலவு திணைக்களம், திறைச்சேரி
11. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம், திறைச்சேரி
12. கணக்காய்வாளர் தலைமை அதிபதி
13. அனைத்து உள்ளூராட்சி செயலாளர்கள்